
முதல்வரை புகழ்ந்து

# கோஷம் போட்ட தொண்டரின் மகனுக்கு அரசு வேலை

திருச்சியை சேர்ந்தவர் இடி மின்னல் கோவிந்த ராஜ். அதிமுகவின் தீவிர தொண்டரான இவர், சட்டமன்றம் நடக்கும்போதெல்லாம் சென்னை வந்து விடுவார். சட்டமன்ற வளாகத்துக்குள் செல்ல இவருக்கு சிறப்பு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.



முதல்வர் வருகின்ற நுழைவுவாயில் பகுதியில் நின்றுகொண்டு முதல்வர் ஜெயலலிதா வரும்போதும் போகும்போது அங்கு நின்று முதல்வரை புகழ்ந்து கோஷம் போடுவார். அந்த பகுதியில் மக்கள் யாரும் இல்லாவிட்டாலும் தனியாக நின்று முதல்வரை புகழ்ந்து கோஷம் போட்டுக் கொண்டே இருப்பார்.

இதனால் இவருக்கு இடிமின்னல் என்ற பெயர் வந்தது. இடி-மின்னல் கோவிந்தராஜின் மகன் சரவணன். 10ம் வகுப்பு வரை படித்துள்ளார். திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் அலுவலக பணியாளராக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றினார். தற்போது அவர் நிரந்தர ஊழியராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், நேற்று காலை வழக்கம்போல் சட்டமன்ற நுழைவு வாயிலில் நின்றுகொண்டு முதல்வர் வரும்போது அவரை புகழ்ந்து இடி மின்னல் கோவிந்தராஜ் கோஷம் போட்டுள்ளார். அங்கு பாதுகாப்பு நின்றிருந்த போலீசார் சென்று, ''உங்கள் மகனுக்குத்தான் வேலை கிடைத்துவிட்டதே பின்னர் ஏன் இங்கு நின்று கோஷம் போடுகிறீர்கள்'' என்று அவரை விரட்டினர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.